**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C.No.61/2024**

Examined as : PW 2

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜெயந்தி | Defence | : |
| Husband Name | : ஞானசேகரன் | Court | : |
| Village | : அன்னவாசல் | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 40/2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 15.05.2025.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

1,3,5,6,8 முதல் 11 எதிரிகள் ஆஜர். 2,4,7 எதிரிகள் ஆஜர் இல்லை. (U/s 355 BNSS Act ன் கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

முதல் விசாரணை:-

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். கடந்த 23.08.2006 நான் கல்யாணி புருஷோத்தம்மன் ஆகியோரிடமிருந்து இடத்தை கிரயம் பெற்று அந்த இடத்தில் கூரை வீடு கட்டி எனது குடும்பத்தாருடன் வசித்து வருகிறேன். எனது இடத்திற்கு அருகில் எனது மாமனாருக்கு 3 – 1/2 சென்ட் நிலம் உயில் மூலம் கிடைக்கப்பெற்றது. எனது மாமனாருக்கு பாத்தியப்பட்ட இடத்திற்கு பின்புறம் மேற்குபுறம் காமராஜ் என்பவருக்கு சொந்தமான இடம் உள்ளது.

2. காமராஜ் என்பவர் நான் கிரயம் பெற்ற இடத்தை அவருக்கு விற்க சொல்லி என்னிடம் கேட்டார். அதற்கு நான் மறுத்துவிட்டேன். அதை மனதில் வைத்துக்கொண்டு காமராஜ் எங்களை தினமும் தகாத வார்த்தைகளால் திட்டி வந்தார். 16.08.2020 அன்று காமராஜ், கிரகதாஸ், தினேஷ், பிரபாகரன் ஆகியோர் எங்களை எனது வீட்டு வாசலில் நின்று கொண்டு தகாத வார்த்தைகளால் திட்டி மிரட்டினார்கள். இது சம்மந்தமாக நாங்கள் பெரம்பூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். போலிசார் இந்த பிரச்சனை சிவில் சம்மந்தப்பட்ட பிரச்சனை என்பதால் நீதிமன்றத்தை அணுகும் படி கூறினார்கள்.

3. 18.08.2020 அன்று காமராஜ், கிரகதாஸ், பிரபாகரன், தாஸ், குமார், உதயராஜ், ஆனந்தபாபு, மாலதி, தினேஷ், ஜான்சன் மற்றும் உலகநாதன் ஆகியோர் எனது வீட்டிற்கு வந்து எனது வீட்டு வாசலில் இருந்த வேலியை பிரித்து எறிந்தார்கள்.

குச்சிக்காரி மகளே, தேவடியா மகளே என சொல்லி திட்டி அடிக்க ஓடிவந்தார்கள். தினேஷ் மற்றும் உலகநாதன் ஆகியோர் எனது வீட்டின் மாட்டு கொட்டகையில் கட்டியிருந்த மாடு மற்றும் ஆடுகளை அடித்துவிரட்டினார். இது சம்மந்தமாக பெரம்பூர் காவல் நிலையம் மற்றும் மயிலாடுதுறை காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் புகார் அளித்தோம்.

4. அவர்கள் நாங்கள் கொடுத்த புகாரின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி இந்நீதிமன்றத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். எனவே எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எதிரிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகிகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.